# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 26—03—1993
இதழ்: 06 விலை ரூபா 3-50



28-3-1993
Nallur Branch Library


**தவக்காலம் : ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்**

"ஆண்டவரைக் கண்டடையக் கூடிய போதே,
அவரைத் தேடுங்கள்;
அவர் அண்மையில் இருக்கும்போதே,
அவரைக் கூவியழையுங்கள்.
தீயவன் தன் தீநெறியையும்
அநீதன் தன் எண்ணங்களையும்
தள்ளி விட்டு
ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்;
அவன்மேல் அவர் இரக்கம் காட்டுவார்;
தம்முடைய கடவுளிடம் வரட்டும்;
ஏனெனில் மன்னிப்பு வழங்குவதில்
அவர் வள்ளல்"

(இசை. 55 : 6-7)

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *

# "உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுத்து மானிட மாண்பினை வளமாக்கிடுவோம்"

"சமாதானம் என்னும் பெரும் பாக்கியத்தை அடைவதற்கு எல்லோருமாக சேர்ந்து செபிப்போம். ஒற்றுமையாய் உழைப்போம்... உண்மைக்கும் நீதிக்கும் குரல்கொடுத்து மானிட மாண்பினை வளமாக்கிடுவோம்," என்று அறைகூவல் விடுத்துள்ளார் யாழ். மறைவட்ட நீதி, சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுவின் தலைவர் அருட்திரு ம. இ. பயஸ் அடிகளார்.

இவ்வாண்டிற்கான தவக் காலச் செய்தியை விடுத்த அடிகளார், மானிடர்களின் துன்ப துயரங்களைப் பற்றி சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் பொருத்தமான காலம் திருப்பாடுகளின் காலம் என்பதை நினைவுபடுத்தி, மனித வளங்கள் பாதிக்கப்பட்டு அன்றாட உணவிற்கே ஊசலாடும் இவ்வேளைகளில் கூட தன்னுடைய அயலானுக்குதவுவது, அவனுடைய முன்னேற்றத்தில் பங்குகொள்ளும் விதத்தில் ஒவ்வொருவரும் தன்னை அர்ப்பணித்து வாழப் பழகுவது அவசியம் எனக் கூறினார்.

ஆகவே, போர்க்கால அனர்த்தங்களினால் பாதிக்கப்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## நெடுந்தீவு நெடும் பயணம் முடித்து ஆயர் திரும்பினார்

கடந்த திங்கள் 16-03-93 அன்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யாழ் நகரிலிருந்து புறப்பட்டு, ஜனநாயக மக்கள் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுந்தீவுக்கும், மற்றும் யாழ் கடற்பிராந்தியத்திலுள்ள தீவுகளுக்கும் மேற்கொண்ட மேய்ப்புப்பணிக்கான திருப்பயணமொன்றை முடித்துக்கொண்டு உடன் சென்ற யாழ். மனித முன்னேற்ற நிலைய இயக்குநர் M.E.பயஸ், யாழ். பேராலயப் பங்குத் தந்தை S. H. ஜெபநேசன், ஆயரின் அந்தரங்க செயலர் T. A. தவராஜசிங்கம் அடிகளார்களுடன், 24-03-93 புதன் காலை11மணிக்கு ஆயர் இல்லத்தை வந்தடைந்தார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

### இராணுவப்பிடியிலுள்ள இளவாலையில்

## லூர்து அன்னை பெருவிழா

இளவாலை, போயிட்டி மக்கள் இன்று இடம்பெயர்ந்து அயலிடங்களிலுள்ள உற்றார் உறவினர் இல்லங்களில் காலங் கழிக்கின்றனர். இந்நிலையிலும் மாசி 11ஆம் திகதி லூர்து அன்னையின் பெருவிழா பத்தியருட்சியாக அனுஷ்டிக்கப்பட்டமை மக்களின் தவப்பயனெனலாம்.

ஆலயத்தையும், ஆலய வளவையும் புனிதமாக்குவதில் மக்கள் ஊக்கத்துடன் உழைத்தனர். நவதினங்கள் திருச்செபமாலையுடன் அனுட்டிக்கப்பட்டன. பெருவிழாவுக்கு முதல் நாள்; அனைவருடைய முயற்சியினாலும் ஆலயமும் திருச்சுருபப் பவனி வரும் பாதையும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது.

அருட்தந்தையர்கள் சமூக மளித்து வழிபாடுகளை நடத்

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

### யாழ். திருமறைக் கலாமன்றத்தின் நூல் வெளியீடு

## ஓர் உலக சாதனை

### "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

''தமிழர் வாழும் இடமெல்லாம் இறைவனை அறிந்து, அன்பு செய்து வாழ்வதற்கு திருமறைக் கலாமன்றம் திறம்படச் செயலாற்றி வருவதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும்; அவர்களைப் பாராட்ட வேண்டும்,'' என்று, யாழ். திருமறைக் கலாமன்றம் அரங்கில் கடந்த திங்கள் 22-03-93 அன்று நடைபெற்ற மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக வருகைதந்த முன்னைநாள் யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கூறினார்.

நேரந்தவறாமைக்கு இலக்கணமாக விருக்கும் திருமறைக் கலாமன்றத்தில், சரியாக மாலை 5 மணிக்கு இவ்விழா மங்கல விளக்கேற்றி, இசைக் கலாமணி நாகராஜா அவர்களின் இறைவணக்கப் பாடலுடன், கலாமன்ற இயக்குநர் அருட் திரு. நீ. மரியசேவியர் அடிகளாரின் தலைமையில் ஆரம்பமானது.

நூல்வெளியீட்டுப் பொறுப்பாளர் திரு. பி. எஸ். அல்பிறேட், ஓய்வு பெற்றிருந்தும், கலையுலகில் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் ஆயர் அவர்களை வாழ்த்தி, ஆயரின் கனவு நினைவாகும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

கலை வழியாக இறைபணியாற்றும் நோக்கமுடன், இறை அருளால் மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி. 34 பிரிவுகளைக் கொண்டு இயங்கும் நிகரற்ற இத்திருமறைக் கலாமன்றம், இலங்கையின் வட, தென்புலங்களிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய சாதனைகளை தன்

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம்)

## 1993 பரிசுத்தவார திருவழிபாடுகள்

## யாழ். மரியன்னை பேராலயம்

**குருத்தோலை ஞாயிறு : ஏப்ரில் 4**

காலை 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி
ஆயரின் கூட்டுத் திருப்பலி
2ஆம், 3ஆம் திருப்பலிகள் காலை 8-00, மாலை 5-30

**பரிசுத்த வாரத்தின் திங்கள் : ஏப்ரில் 5**

மாலை 5-00 திருத்தைலம் மந்திரிக்கும் ஆயரின் திருப்பலி

**பரிசுத்த வாரத்தின் வியாழன் : ஏப்ரில் 8**

மாலை 5-00 நற்கருணை வழிபாடு

**திருப்பாடுகளின் வெள்ளி : ஏப்ரில் 9**

காலை 6-30 திருச்சிலுவையின் சிந்தனை
(பேராலய முன்றலில்)
மாலை 3-30 வார்த்தை வழிபாடு,
திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து.

**புனித சனிக்கிழமை : ஏப்ரில் 10**

இரவு 11-30 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு - ஏப்ரில் 11**

காலை 5-30 திருப்பலி
காலை 6-30 ஆயரின் கூட்டுத் திருப்பலியும்,
பாப்பிறையின் ஆசீரும்.
3ஆம், 4ஆம் திருப்பலிகள் காலை 8-00 — மாலை 5-30

யாழ். மரியன்னை பேராலயம் பங்குத்தந்தை

## பங்குத்தந்தையர்க்கு முக்கிய அறிவித்தல்

இவ்வருடம் முழுவதும் திருமலை – மட்டுநகர் மறைமாவட்டத்தின் நூற்றாண்டு விழாவிற்கான பங்குகளின் புதுப்பித்தற் பணியில் அ. ம. தியாகிகளின் போதகர்கள் ஈடுபட்டிருக்கின்றபடியால், ஏனைய மறைமாவட்டங்களின் பங்குப் பணிகளுக்கு எமது பணி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதை மிகவும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

அருள்திரு
போல் நட்சேஸ்திரம் அ. ம. தி.
இயக்குநர், தொடர்பகம்

## அனாதைச் சிறுவர் இல்லங்கள் அமைப்பு

சமகால நிகழ்வுகளால் தாய், தந்தையை இழந்து, அன்பு, ஆதரவு அற்று அங்கலாய்க்கும் மழலைகளுக்கு உதவுவது, யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய பணிகளில் சிறப்புரிமை பெறுவதாக இயக்குநர் அருட்தந்தை M. E. பயஸ் அடிகளார் தெரிவித்திருக்கிறார்.

இச் சிறுவர் சிறுமியரை யாழ். குடாநாட்டில் பராமரிக்கும் இல்லங்கள் தொடங்குவதற்கு யாழ். ஆயரின் ஆசீர் அநுமதியும் இருப்பதால், தகுதியானவர்களை இனம்கண்டு தமக்கு அறிவிக்கும்படி பங்குக்குருக்களை மேலும் அவர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

ஆண்டு நான்கு அல்லது அதற்கு மேலான வகுப்புகளில் படிப்பவர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள பங்குத்தந்தை வழியாகவிண்ணப்பிக்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## உடுப்பிட்டியில் திருப்பாலத்துவ சபை விழா

உடுப்பிட்டி உலகரட்சகர் ஆலயத்தில் 07-03-93 ஞாயிற்றுக்கிழமை அன்று, அவ்வாலயத்தைச் சேர்ந்த சிறுவர்களும் பலாலியிலிருந்து இடம்பெயர்ந்த சிறுவர்களும் ஒன்றிணைந்து காப்பாளர் செல்வன் வே. கிங்ஸ்லிகுமார் தலைமையில் திருப்பாலத்துவசபையின் விழாவைக் கொண்டாடினார்கள். அன்று காலை 8.30 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்பு மாலை 5 மணியளவில் சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பிரதமவிருந்தினராக பங்குத்தந்தை அருட்திரு. கிறிஸ்தோப்பர் அடிகள் கலந்து இவ்விழாவைச் சிறப்பித்தார். அவர் தனது ஆசியுரையில் சிறுவர்களின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தைத் தெளிவுற எடுத்துக்கூறினார். பரிசளிப்பு வைபவத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

தகவல்
வே. கிங்ஸ்லிகுமார்

## எம்கருத்து

# பதுக்கி அல்ல, பகிர்ந்து வாழவேண்டும்

நம் நாடு சுயநலத்தால், பேராசையால் இருள் அடைந்திருக்கிறது. இந்த இருண்ட பிரதேசத்தில் பிறரன்பை நிலைநாட்டி ஒளியை வீச நாம் அழைக்கப் படுகின்றோம்.

**"பசித்தவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு. ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன் வீட்டில் தங்கு வதற்கு இடம் கொடு.**

**ஆடையில்லாதவனைக் கண்டால், அவனைப் போர்த்து.''** (இசை. 58:7)

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் இவைகளை ஒவ்வொருவனும் தன் அயலானோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப் படுகிறான்.

அயலானை அழித்து, அல்லது பயன்படுத்தி தான் மட்டும் வாழ்ந்துவிடவேண்டுமென்னும் சுயநலவாதிகள் பலர் இன்று இங்கு காணப்படுகின்றனர். அடுத்தவனுக்கு இல்லையென்று அறிந்திருந்தும் தன் தேவைக்கு மிகுதியாக இருப்பதை பதுக்கிவைத்து பணம் தேட முயற்சிக்கின்றனர் பலர். மக்கள் படும் துன்பங்களைக் கண்டும் காணாதவர்கள்போல், கயவர்களாக மற்றவர்களை உறிஞ்சிக்குடித்து தங்கள் களஞ்சியங்களை நிரப்பி நிறைவு பெறுகிறவர்கள் இவர்கள். குறிப்பாக ஒன்று சொல்ல வேண்டுமானால், மக்களின் பாதுகாப்பிற்காக அமைக்கப்படும் பதுங்கு குழிகளில், இருளை அகற்றி ஒளியை ஏற்றப் பயன்படுத்தப்படும் மக்களின் எண்ணையைப் பதுக்கிவைத்து, சந்தையின் விலையை விந்தையாக்கும் வீதி ஒர விற்பனர்கள் இவர்களில் அடங்குவர்.

இத்தகைய சூழ்நிலையில் வாழுகின்ற நல்மனத்தோர்க்கு பிறரன்புடன் பகிர்ந்துவாழ இத்தவக்காலச் சிந்தனைகள் சவால் விடுகின்றன.

ஏமாற்றிப் பிழைக்கும் பிழைப்பு என்றும் நீடிக்காது. நம்மிடம் சிலர் சில நாளைக்கு ஏமாறலாம். பலர் பல நாளைக்கு ஏமாறலாம், ஆனால் எப்போதும் எல்லோரும் நம்மிடம் ஏமாறுவார்களென்று எதிர் பார்க்கக்கூடாது.

உண்மை ஒருபோதும் சாகாது. அது எப்போதாவது வெளிவந்துவிடும். சாமர்த்தியசாலிகள் நம்மிடம் பலர் உண்டு. அவர்கள் எவரது பொய்யையும், களவையும் கண்டு பிடித்து உண்மையை வெளிப்படுத்தும் வல்லமை உடையவர்கள்; வெளிப்படுத்தவும் வேண்டும்.

ஏமாற்றுவதில் செலுத்தும் அறிவையும், செய்யும் முயற்சியையும் உழைப்பதில் செலவிட்டால் பெரும் பயன் விளையும். உலக வரலாற்றில் ஏமாற்றுக்காரர்கள், பாசாங்குக்காரர்கள், பொய்யர்கள் நிரந்தரமாக வாழ்ந்ததைக்காண முடியாது. அப்படி வாழ்ந்தாலும் காலப்போக்கில் அவர்கள் இனம் காணப்பட்டு கண்டனத்திற்கும் தண்டனைக்கும் உள்ளாகி மக்களால் தூற்றப்படுவார்கள்.

வஞ்சனையால் வெற்றி பெற்றோம் என்று மகிழ்பவர்கள் அற்பர்கள். அவர்கள் இன்று மகிழலாம்; நாளை மக்களால் தூற்றப்பட்டு, தூக்கி எறியப்பட்டு, வாழ்வதற்கு வழியின்றி, அன்னமின்றி அலைய நேரிடும்.

ஆகவே, உண்மையோடு உழைக்கவேண்டும். பிறரை நம்ப வேண்டும்; பிறரது நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும். வஞ்சித்துத் தேடும் செல்வமும் புகழும் நிலையானவை அல்ல என்பதை உணரவேண்டும். தெய்வத்திற்குப் பயந்து நேரிய வழியில் தேடும் செல்வமே நிலைக்கும். பகிர்ந்து கொள்ளும் செல்வமே பலுகிப் பெருகிப் பயனளிக்கும்; நிம்மதி தரும்!

# திருமறை அறிவை வளர்ப்போம்

## கிறிஸ்துவின் வருகைக்கு முன் மீட்பின் வரலாறு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

5\. சில நூற்றாண்டுகளின் பின்னர் மோயீசன், ஆபிரகாமின் சந்ததியினரிடத்தில் தாம் ஓர் இனம் என்ற உணர்வை ஏற்படுத்தினார். இறைவன் தமக்களித்த நன்மைகளை அனுபவித்தமையும், சகல இன மக்கள் முன்னிலையிலும் இறைவனின் திருப்பெயரை அறிவிக்கும் பொருட்டு அவர்களை ஒரு ''இராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சனமும்'' ஆக ஏற்படுத்தி (யா. 19,5) ஆபிரகாம் குலத்தவரோடு இறைவன் செய்துகொண்ட பொது உடன்படிக்கையும் இதற்கு ஆதாரமாக அமைந்தன. புதுப்பிக்கப்பட்ட இந்த உடன்படிக்கைக்கு அத்திவாரமாக இருந்தது இறைவன் தமது சித்தத்தின் வெளிப்பாடாக மோயீசனிடம் கையளித்த ''பத்துக் கற்பனைகளுக்கு பணிந்து நடத்தலாகும்; 1) நமக்கு முன்பாக வேறு கடவுளர்கள் உனக்கு இல்லாது போவார்களாக. 2) உன் கடவுளாகிய ஆண்டவருடைய பெயரை வீணாய்ச் சொல்லாதே. 3) ஒய்வுநாளைப் புனிதமுள்ளதாக நினைக்கக் கடவாய். 4) உன் தந்தையையும் தாயையும் மதித்துப் பேணக்கடவாய். 5) கொலை செய்யாதிருப்பாயாக. 6) விபசாரம் செய்யாதிருப்பாயாக. 7) களவு செய்யாதிருப்பாயாக. 8) உன் பிறனுக்கு எதிராய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. 9. உன் பிறனுடைய மனைவியை ஆசியாதிருப்பாயாக. 10) உன் பிறனுடைய உடைமைகளை ஆசியாதிருப்பாயாக'' (உபாகமம் 5:7–21)

6\. காலத்தின் நிறைவில் மெசியாவை (அபிஷேகம் பெற்றவர் எனப்பொருள்படும் எபிரேயச் சொல்) அனுப்புவதன் மூலம் தாம் நிறைவேற்ற இருக்கும் நிறைவான வெளிப்பாட்டையும், ஒரு புதிய அனைத்துலக உடன்படிக்கையையும் கருத்தில் கொண்டு தம்மை உலகில் அறிவிக்கும் ஓர் இனத்தை ஏற்படுத்துவதே இறைவனுடைய இந்தத் தனிப்பட்ட தலையீட்டின் நோக்கமாகும். புதிய உடன்படிக்கையின் விசேட பண்பு என்னவென்றால், மக்கள்மத்தியில் இறைவன் மிக நெருங்கிய விதத்தில் பிரசன்னமாயிருப்பதும், இறையன்பையும், இறையறிவையும் உலகெங்கும் பரப்புவதுமாகும். இறைவாக்கினர் எரேமியாசின் மிக முக்கியமான வாசகமொன்று இதனை எடுத்துரைக்கிறது. ''இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நாம் புதிய உடன்படிக்கை செய்வோம் என்கிறார் ஆண்டவர்... நாம் இஸ்ராயேல் வீட்டாரோடு செய்யப்போகும் உடன்படிக்கை இதுவே. நமது திருச்சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்போம். அவர்களுடைய இதயங்களின்மேல் அதை எழுதுவோம். நாம் அவர்களின் கடவுளாய் இருப்போம். அவர்கள் நம் மக்களாய் இருப்பர்... அவர்களுள் சிறியவன் முதல் பெரியவன் வரை அனைவரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்கிறார் ஆண்டவர்.'' (எரேமி. 31:31–34)

இறைவாக்கினர் எசெக்கியேலின் நூலில் இது போன்ற ஒரு பகுதி மேலும் கூறுகின்றது; ''நாம் உங்களுக்கு ஒரு புதிய இதயத்தை அருளுவோம். உங்கள் உள்ளத்தில் புதிய ஆவியை ஊட்டுவோம், எமது ஆவியை உங்கள் உள்ளத்தில் ஊட்டுவோம் எமது திருச்சட்டத்துக்குப் பணிந்து நடக்கச் செய்வோம்''. (எசெக். 11:19–20)

7\. இயேசுகிறிஸ்துவில் இறைவன் ஏற்படுத்தியது இந்தப் புதிய உடன்படிக்கைதான். அப்போஸ்தலரான புனித சின்னப்பர் இந்த மாபெரும் நிகழ்ச்சியைப் பொழிப்பாகக் கூறுகின்றார்; ''காலம் நிறைவுற்றபோது நாம் இறைவனின் பிள்ளைகளாகும்படி, கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்பினார்.'' (கலாத். 4:4,5)

இவ்வாறாக, யூதமக்களோடு இறைவன் செய்த உடன்படிக்கை இப்புதிய அனைத்துலக உடன்படிக்கையில் முழு மலர்ச்சிபெற்றது. சகல மக்களின் மீட்பரும் மீட்பின் இடைநிலையாளருமான இறை–மனிதர் இயேசு கிறிஸ்து இப்புதிய உடன்படிக்கையின் மையமும் அச்சாணியுமாவார். அவர் வழியாகக் கடவுள் மக்கள் நடுவில் பிரசன்னமாயிருக்கிறார். அவர்களை நிலைமாற்றி தன்னிடம் அழைத்துவரக் கூடிய சொல்லையும் ஒளியையும் அளிக்கிறார்.

(வளரும்)

# தவக்காலச் சிந்தனை

## ஆறுதல் அளிப்போம்

தவக்காலத்தில் சிறப்பாக பாடுகளின் வாரத்தில் இயேசுவின் பாடுகளைப் பற்றி பலவாறாக சிந்தித்து தியானிக்கிறோம். இயேசு தனது பாடுகளின் நேரம் நெருங்கி வருகின்றதை உணர்ந்தார். அதன் கொடூரத்தை, துன்ப வேதனையை தாங்கமுடியாதவராக தந்தையுடன் செபிக்கச் சென்றார். அவ்வேளையில் தன்னோடு கூட இருந்து செபிக்கும்படி தனது அன்பு சீடர்களையும் அழைத்துச் சென்றார். தூக்க மயக்கம் அவர்களை ஆட்கொண்டது. இயேசுவை மறந்து தூங்கிவிட்டனர். அவ்வேளையில் இயேசு சீடர்களைப் பார்த்து, ''ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியவில்லையா?'' என்று ஏக்கத்துடன் கேட்கிறார்.

இது அன்று மட்டும் கேட்கப்பட்ட ஓலமல்ல, இன்றும் கேட்கப்படுகின்ற, கேட்டுக் கொண்டேயிருக்கின்ற ஏக்கக் குரல், தற்கால போர் சூழலிலே உணவு, உடை, உறையுள் இன்றி எப்படி வாழப் போகின்றோம் என்கின்ற கொடூர வேதனையில் எழுகின்ற அபயக்குரல், எனக்கு உணவு இல்லை, உடையில்லை வாழ வழியில்லை, அன்புகாட்ட யாருமில்லை என்கின்ற இயேசுவின் சோகக்குரல். ஆனால் நாம் அக்குரலை கேட்கமுடியாது, உலகியல் போக்கில் மயங்கி தூங்கிவிடுகின்றோம். கண்ணிருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராக இயேசுவை காணாதவர்களாக வாழ்கின்றோம்.

தவக்காலம் பிறந்துவிட்டால் ஆலயம் சென்று ஆண்டவனின் பாடுகளைத் தியானித்து, கண்ணீர் விட்டு ''நாங்கள் உமக்கு ஆறுதல் அளிப்போம் ஆண்டவரே'' என்று செபிக்கின்றோம். ''சின்னஞ்சிறிய சகோதரருள் ஒருவனுக்கு செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' என்ற இயேசுவின் வார்த்தைகளை மறந்து விடுகிறோம். எனவே என்னோடு கூட விழித்திருந்து ஆறுதல் தாருங்கள் என்று எம்மை அழைக்கும் இயேசுவுக்கு உதவிசெய்ய எம் வாழ்வால் ஆறுதல் கொடுக்க முன்வருவோம்.


— இ. ம. ஜெயசீலன்
யாழ். திருவழிபாட்டு நிலையம்

# வெற்றியா? தோல்வியா?

மனிதனின் மனம் விசித்திரமானது. வெற்றியை எவ்விதம் பூரிப்புடன் ஏற்றுக் கொள்கின்றோமோ அதேயளவு மனத் தாங்கலுடன் தோல்வியை மனிதன் ஏற்றுக் கொள்வது இல்லை. வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாகவேண்டும். தோல்வியைக் கண்டு துவண்டு விடக்கூடாது. வெற்றியைக் கண்டு இறுமாப்படையக் கூடாது. வெற்றி என்பது வாழ்க்கையின் முடிவல்ல. அது பயணத்தின் போது இளைப்பாறும் இடம். எனவே வெற்றியில் இளைப்பாறிவிட்டு அடுத்த பயணத்தின் முடிவை மகிழ்வுடன் எதிர் நோக்க வேண்டும். தோல்விகள் தான் வெற்றியின் படிகள். எனவே தோல்வியைக்கண்டு மனம் சோர்ந்துவிடாமல் மீண்டும் தேடுங்கள். தேடுங்கள் கண்டடைவீர்கள். மீண்டும் தட்டுங்கள் திறக்கப்படும்.

N. ஆனந்தி

# சிலுவையின் பாதையில் நற்செய்தி



### XI

"அவரைச் சிலுவையில் அறையும் போது காலை ஒன்பது மணி. அவர்மேல் சாட்டிய குற்றத்தைக் குறிக்கும் பலகையில் "யூதரின் அரசன்" என்று எழுதியிருந்தது."

( மாற். ( 15:25-26 )

"கடவுளுக்கென்று வாழும்படி நான் சட்டத்தின் செயலால் சட்டத்தைப் பொறுத்தமட்டில் இறந்தவன் ஆனேன். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். இனி வாழ்பவன் நானல்ல; என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே."

( கலா. 2:19 )

### XII

காடியைச் சுவைத்த பின் இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்றார். பின்பு தலை சாய்த்து ஆவியைக் கையளித்தார்.

( அரு. 19:30 )

"அவரோடு இறந்தோமானால் அவரோடு வாழ்வோம். நிலைத்து நின்றால் அவரோடு அரசாள்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்."

( 2 திமே. 2:11-12 )

### XIII

அரிமத்தியா ஊர் சூசை என்பவர்... இயேசுவின் சடலத்தை எடுத்துவிடப் பிலாத்துவிடம் விடைகேட்டார். பிலாத்து விடையளித்தான். அவர் வந்து இயேசுவின் சடலத்தை எடுத்தார்.

( அரு. 19:38 )

"கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் எவன்? வேதனையோ? நெருக்கடியோ? கலாபனையோ? பசியோ? ஆடையின்மையோ? இடர்களோ? வாளோ? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?"

(உரோ. 9:35)

### XIV

சூசை கோடித்துணி வாங்கி வந்து, இயேசுவை இறக்கி, துணியில் சுற்றி, பாறையில் குடைந்த கல்லறையில் வைத்து, அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்.

( மாற். 16:46 )

"நீ விதைப்பது மடிந்தாலொழிய, புத்துயிர் பெறாது... வெறும் கோதுமை மணியையோ மற்றெந்த விதையையோ நீ விதைக்கிறாய். கடவுளோ தமது விருப்பம்போல் அதற்கு உருவம் தருகிறார்."

( 1 கொரி. 15:37 )

### XV

தூதர்கள் அவர்களைப் (பெண்களைப்) பார்த்து, "உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன்? அவர் இங்கே இல்லை: உயிர்த்துவிட்டார்" என்றார்.

( லூக். 24:6 )

"முதற்கனியாகக் கிறிஸ்து உயிர்பெற்றார். அடுத்து, கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் அவருடைய வருகையின்போது உயிர் பெறுவர்."

( 1 கொரி. 15:23 )

## பக்தி எனும் அன்பு

—R. அதிதி—

உலகத்தில் இரு விதமான அன்பு உண்டு. மழைபோல் எப்போதும் பெய்து நின்றுவிடுகின்ற அன்பு, சூரியனைப் போல் நாள் தவறாமல் தோன்றுகின்ற அன்பு. எல்லா விதமாக கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் அந்த இருவித அன்பிற்கு அர்த்தங்களும் உண்டு. ஆளும் அன்பு, ஆட்படும் அன்பு. யார்மேல் அன்பு செய்கிறோமோ அவருக்கு ஆட்படும் அன்பு ஒன்று, அவரையே ஆள விரும்பும் அன்பு ஒன்று. அவரையே ஆள விரும்பும் அன்பைக் காட்டிலும் ஆட்படுகின்ற அன்பு பக்குவமானது. ஆட்பட விரும்பும் அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை, ஆளவிரும்பும் அன்பு பல விதமான பெயர்களில் கூறப்படுகின்றது. ஆட்படும் அன்பு பக்தி என்று சொல்லப்படும். ★

## நிபந்தனையற்ற அன்புடன் வாழவேண்டும்

ஒருவன் தன் நண்பனுக்காக தன் உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை என்று இயேசு சொல்கிறார். இதுவே நிபந்தனையற்ற அன்பு என்று கூறப்படுகின்றது. சூரியன் தினமும் ஒளியைக் கொடுக்கிறான், ஆனால் "நான் உனக்கு ஒளியைத் தந்தேன் நீ எனக்கு ஏதாவது தா" என்று எம்மிடம் திரும்பக்கேட்பது இல்லை. மழையும் இவ்வாறே. மழையினால் நாம் எத்தனையோ நன்மைகளைப்பெறுகின்றோம், ஆனால் இவைகள் எம்மிடம் எதுவும் எதிர்பார்ப்பது இல்லை. இவ்வாறே இறைவனின் அன்பும் நிபந்தனையற்றது. மனிதன் இவ்வுண்மைகளைக் கற்றுக்கொள்ளல் வேண்டும். மனிதன் பாவத்தைச் சம்பாதித்துக் கொண்ட போதிலும் இறைவன் தன்னுடைய மகனை அனுப்பி எம் எல்லோரையும் சிலுவைச் சாவின் மூலம் மீட்டார். இந்தச் செயல்களுக்கெல்லாம் காரணம் இறைவனின் தூய நிபந்ததையற்ற அன்பே.

இறைவன் எமக்கு நிபந்தனையற்ற அன்பு செய்கிறார். இவ்விதமே எம்மிடமும் நிபந்தனையற்ற அன்பை எதிர் பார்க்கிறார். "ஆகையால் உங்களுக்கு பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்." இறைவாக்கும் திருச்சட்டமும் இதுவே. இந்த உண்மைகளை உணர்ந்து மனிதன் ஒருவருக் கொருவர் அன்பு செய்ய வேண்டும். பலனை எதிர்பாராது நிபந்தனையற்ற அன்புடன் வாழ வேண்டும்.

## உலக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை உரையில் எடுத்துரைத்தார் அருட்திரு. நீ. மரிய சேவியர் அடிகளார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்வு, உலக அரங்கில் வேறு எவரும் புரியாத ஒரு சாதனையை நிறைவேற்றுகின்றது. ஏனெனில் இம்மன்றம் திருமறை நூலை சீர் வரிசையில் நாடகமாக எழுதி வெளியிட உறுதிபூண்டுள்ளது. கலைஞர் செ. அ. அழகராஜா எழுதி வெளியிடப்படும் இரு நூல்கள் இம் முயற்சியின் முதற்கட்டமாகும்" என்றும் மேலும் கூறினார் தலைவர் அடிகளார். அருட் கலாநிதி நீ.மரியசேவியரின் அடிகளாரின் "பலிக்களம்," கலைஞர் செ. அ. அழகராஜாவின் "காலையும் மாலையும்," "மண்ணே சாட்சி" என்னும் 3 நூல்களின் முதற் பிரதிகளை, முறையே, அருட் செல்வி M. ஜெறோம் A. C., அருட் செல்வி M. யோலன்ட H. F., அருட் தந்தை P. M. இம்மானுவேல் ஆகியோர் ஆயரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

## லூர்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினர். கருத்தமைந்த பாடல்களும், மறையுரையும், தற்கால சூழ்நிலையை ஒட்டிய வேண்டுதல்களும். விண்ணப்பங்களும் திருப்பலியை அர்த்தமுள்ளதாக்கின. தொடர்ந்து திருச் சுருபப் பவனியும் சுரூப ஆசீர் வாதமும் வழமைப் பிரகாரம் இடம்பெற்ற பின்பு – அனைவர்க்கும் இனிய விருந்துபசரணை நடைபெற்றது.

தகவல்

அருட்தந்தை. ஞா. பீற்றர்

## தவக்காலத்திற்கேற்ற
### சிறிய தவமுயற்சிகள்

- உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்.
- உங்களைத் துன்புறுத்துவோருக்காகச்செபியுங்கள்.
- யாராவது உன் வலக் கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு.
- யாராவது உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு.
- நீங்கள் தீர்ப்புக்குள்ளாகாதபடி தீர்ப்பிடாதீர்கள்.

## காவலன் கண்மணிகள்

| ஒளி: 7<br>சுடர்: 6 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

ஐம்பது வினாக்கள் :

சரியான விடையைத் தெரிவு செய்க.

41 கடைசி இராப்போசன வேளையில் இயேசு ஏற்படுத்திய அருட்சாதனங்களில் ஒன்று திருமுழுக்கு / நற்கருணை.

42 2ஆம் வத்திக்கான் சங்கத்தை திட்டமிட்டு ஆரம்பித்த பாப்பரசர் 2ஆம் அருள் – சின்னப்பர் / 23ஆம் அருளப்பர்

43 ஜாயீர் என்பவர் செபக்கூடத் தலைவன் / நூற்றுவர் தலைவன்.

44 சலமோன் மன்னன் இறைவனிடம் கேட்ட வரம் செல்வம் / ஞானம்.

45 பெரிய சனியன்று ஆசீர்வதிக்கப்படும் முக்கியமான பொருள் பாஸ்கா மெழுகுவர்த்தி / புதுநெருப்பு.

46 விண்ணகக் காட்சியைக் கண்ட நற்செய்தியாளர் புனித லூக்காஸ் / புனித அருளப்பர்.

47 இயேசுவின் பாடுகளில் இறுதிவரை பின்சென்றவர்கள் சீடர்கள் / பெண்கள்.

48 கிறிஸ்து பரிசேயரின் வெளிவேடத்தையும், கபடத்தன்மையையும் புகழ்ந்தார் / கடிந்தார்.

49 ஆண்டவரின் நாள் எனப்படும் தினம் சனி / ஞாயிறு.

50 பாஸ்கா காலம் உள்ளடக்கிய நாட்கள் நாற்பது / ஐம்பது

அன்புக் கண்மணிகாள்!

உங்கள் விடைகளை 16-04-1993க்கு முன்

ஐம்பது வினாக்கள்
பாதுகாவலன் த. பெ. எ. 2
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

அங்கத்துவ எண்ணை எழுத மறக்கவேண்டாம். புதியவர் அங்கத்துவம் கோரி விண்ணப்பித்தால் எண் தரப்படும்.

உங்கள் அன்பின்

அன்பு விழி

## விருந்தோம்பல்

தமிழ் மக்களின் தனிப்பண்புகள் பல. அவற்றுளெல்லாம் மிகச் சிறந்தது விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பலுக்கு அவசியமானவை பொருள் அல்ல. இன் முகத்தோடு கூடிய இனிய மொழிகளேயாகும். தன்னை நாடிவரும் விருந்தினரை இன் முகத்தோடு உபசரிப்போனின் வாழ்க்கை வறுமையால் வருந்தி அழிவதில்லை. அவனது செல்வம் இறைக்குந்தோறும் நீரூற்றுப் பெருகுவதுபோலப் பெருகிக் கொண்டிருக்கும்.

## இளவரசி டயானா....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின், "இளவரசி டயானா இறைவனின் பணியை இவ்வுலகில் ஆற்றுகிறார்," என்று கூறிய அன்னை தெரேசா, "அவரிடம் ஓர் அழகான உணர்வு இருக்கிறது," என்றும் தெரிவித்தார்.

இவர்கள் இருவரின் இரண்டாவது சந்திப்பு கடந்த செப்ரெம்பர் மாதத்தில் வடக்கு லண்டன், கில்பேன் என்னுமிடத்திலுள்ள "இரக்கத்தின் பணியாளர்" ( Missionaries of Mercy ) சபையின் இல்லத்தில் இடம்பெற்றது.

இளவரசி டயானாவின் மூதாதையரான பிரபு இக்னேசியஸ் ஸ்பென்சர் ஏழைமக்களுக்கு சேவை புரிய தன் உயர் நிலையைத் துறந்து,1830ஆண்டில் கத்தோலிக்க குருவானார் என்பதும், இவர் ஓர் புனிதர் நிலைக்கு பரிசுத்த பாப்பரசரால் உயர்த்தப்படுவாரென எதிர்பார்க்கப் படுகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# செய்திச் சாறு

★ மூன்று வெவ்வேறு மதங்களைக் கொண்ட அல்பேனியா தன் மத சகிப்புத்தன்மை மூலம் உலகிற்கு ஓர் எடுத்துக் எடுத்துக்காட்டாக உள்ளது என அறிவித்தார் கருதினால் ஜோசெவ் தொம்கோ.

★ உள்நாட்டுப்போர் இடம்பெற்றுவரும் இலங்கையில் மக்கள் காணாமற்போவது குறைந்துள்ள போதிலும் அது இன்றும் தீவிரப் பிரச்சனையாகவே இருந்து வருவதாக ஐ. நா. வின் மனித உரிமைகள் குழு அறிவித்துள்ளது.

★ புனித நகரான எருசலேமின் ஆன்மீக முக்கியத்துவம் குறித்து கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூதர் கலந்துரையாடும் கூட்டம் வரும் மே மாதம் சுவிச்சர்லாந்தில் இடம்பெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மதங்களுக்கிடையான பிரச்சினைகளை களையவேண்டும்

மதங்களுக்கிடையிலான பிரச்சனைகளைக் களைய இஸ்லாமியர்கள் கத்தோலிக்கருடன் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென ரம்ழான் புனித தினத்தை ஒட்டி திருப்பீடம் அழைப்பு விடுக்கின்றது. மதங்களுக்கிடையிலான பிரச்சனைகள் சில வேளையில் உள்நாட்டுப் போருக்கு எடுத்துச்சென்று மனித துன்ப விளைவுகள் தோன்றுகின்றன எனச் சொன்னார். உலக சகோதர சகோதரிகளுக்கு என்ற விண்ணப்பத்துடன் தொடங்கும் இந்தச் செய்தி மனித குலம் முழுவதும் ஒரே குடும்பம் என்பதால் வரும் பிரச்சனைகளை அகற்றவும் பிரச்சனைகளைக் குறைக்கவும் ஒவ்வொருதரும் முயல வேண்டுமெனவும் அழைப்பு விடுக்கின்றது. மதங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டுணர்வை தெரிவிக்கும் முகயாக இவ்விண்ணப்பம் விடப்பட்டது என திருப்பீடம் அறிவிக்கின்றது.

## அன்னை திரேசாவின் புதிய இல்லம்

இவ்வாண்டில் புதிய இல்லம் ஒன்றைத் திறக்க அன்னை திரேசா சபையினர் திட்டமிட்டுள்ளனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. தேரோ மாநிலத்தினால் நன்கொடையாகவழங்கப்படவுள்ள இவ் இல்லத்தின் சீரமைப்புப் பணிக்கு உலக வங்கியும் அமெரிக்க நாடுகளுக்கான வளர்ச்சி வங்கியும் 50 லட்சம் டொலர்களை வழங்கும் எனவும் சொல்லப் பட்டுள்ளது. இத்தகைய இல்லமொன்றைத்திறக்கவேண்டுமென்று கேரோப் பேராயர் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து இது திறக்கப்படவுள்ளது. பிச்சையெடுப்போர், விபசாரிகள் போன்றோருக்கு கேரோ மறைமாநிலம் கடந்த 3 ஆண்டுகளாக பணி ஆற்றிவருகின்றது.

## சமூக ஒழுக்கச் சீர்கேட்டைத் தடுப்பது மக்களின் கடமை

பாலியல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தரங்குறைந்த இலக்கியங்களை வெளியிடுவதற்கு இருந்த தடைகளை சாம்பியா அரசு நீக்க எடுத்திருக்கும் முடிவிற்கு அந்நாட்டுக் கிறிஸ்தவச் சபைகள் தம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. காம உணர்வுகளைத் தூண்டும் மஞ்சள் பத்திரிகை அனுமதிக்கும் சட்டத்தை பாராளுமன்றம் மூலம் அரசு நிறைவேற்றினால் அடிமட்ட மக்கள் பக்கமிருந்து எதிர்ப்பை ஊக்குவிக்க உள்ளதாகவும் கிறிஸ்தவ சபைகள் அரசை எச்சரித்துள்ளன.

பள்ளியில் மாணவ மாணவிகள் கூட வாசித்து வரும் பத்திரிகைகளில் இந்த இழிபொருள் இலக்கியத்தினை ஊக்குவிப்பதன் மூலம் எத்தகைய நன்மையை அரசு அடைய முன்வருகின்றது என்ற கேள்வியை முன்வைத்துள்ளார் சாம்பிய இவாஞ்சலிக்கன் சபையின் பொதுச்செயலர். சாம்பிய கிறிஸ்தவச் சபைப் பொதுச் செயலர் வெளியிட்ட அறிக்கையில் சமூகத்தில் ஒழுக்கச் சீர்கேட்டைக் கொண்டுவரும் ஒன்றைத் தடுக்கப் பொதுமக்களுக்கு கடமை உள்ளதால் இச் சட்டம் குறித்து பொதுமக்கள் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் என்ற விண்ணப்பத்தை அரசின் முன்வைத்துள்ளார்.

## அன்னை திரேசாவுடன் திருத்தந்தையின் திருப்பயணம்

எதிர் வரும் ஏப்ரில் 25ஆம் திகதி அல்பேனியாவுக்குத் திருப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் திருத்தந்தையுடன் அன்னை திரேசாவும் செல்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்நாட்டின் முன்னாள் கம்னியூச அரசால் 25 வருடங்கள் பள்ளியாகப் பயன்பட்டுவந்த மிகப்பெரிய முக்கியமான பேராலயம் ஒன்று மீண்டும் வழிபாட்டுத் தலமாகத் திறக்கப்பட்டுள்ளது. விசுவாசப் பரவுதல் திருப் பேராலய தலைவர் கருதினால் ஜோசேவ் ரொம்கோ, அல்பேனியாவுக்கான திருப்பீடத் தூதுவர் இஸ்லாம் மற்றும் அரசியல் முக்கியத் தலைவர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். அல்பேனியாவின் முன்னாள் சர்வாதிகாரி நிர்மல் கோக்ஸசாவினால் 1967ல் மூடப்பட்ட இந்தப் பேராலயம் வத்திக்கானுடன் தொடர்புடைய ஓர் இத்தாலிய நிறுவனத்தால் சீரமைக்கப்பட்டது. 1967-ல் தன்னை உலகில் முதல் நாத்திக நாடு என அறிவித்த முன்னாள் கம்யூனிச நாடான அல்பேனியாவில் சுமார் 10 வீதத்தினர் கத்தோலிக்கர் 64 வீதத்தினர் இஸ்லாமியர் 25 வீதத்தினர் ஆர்தடக்ஸ் சபையினர்.

## உண்மைக்கும் நீதிக்கும் குரல்...

( 1.ஆம் பக்கத் தொடர்ச்சி )

பட்ட மக்களுக்கு உதவும் முகமாக, எமது விசேடவிதமான ஆதரவும் அன்பும் செபமும் அதிகமாகத் தேவைப்படுகின்றதைத் தெளிவுபடுத்தி, இத் தவக்கால ஐந்தாம் ஞாயிறு, 28-03-93 அன்று, தான தர்மத்தின் பயனாகச் சேகரிக்கப் படும் நிதியை, யாழ். ஆயர் இல்லத்தின் நிதிப்பொறுப்பாளர் அருட்திரு P. இருதயதாஸ் அடிகளாரிடம் அனுப்பிவைக்குமாறு, நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுவின் தலைவர் M. E. பயஸ் அடிகளார் கேட்டுக்கொள்கின்றார்.

# இளவரசி டயானா கத்தோலிக்கராகலாம்?

இங்கிலாந்து, ஒக்ஸ்போட் என்னுமிடத்திலுள்ள 30 டொமினிக்கன் சபையினர் கொண்ட "பிலாக் விறயேர்ஸ் பிறயறி" (Black Friars Priory) எனும் இல்லத்தில் அந்நாட்டின் முடிக்குரிய இளவரசன் சாள்ஸ் என்பவரின் தற்போது பிரிந்து வாழும் மனைவி இளவரசி டயானா கத்தோலிக்க மதத்தைத் தழுவுவதற்கான ஆயத்த சமய அறிவைப் பெற்றுவருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இத்தகவலை ஊர்ஜிதப்படுத்த அவ் இல்லத்தின் தலைவர் அருட்தந்தை றொபேட் ஓம்பிறேஸ் தயக்கம் காட்டியுள்ளார்.

அன்னை தெரேசாவுடன் கடந்த ஆண்டில் இளவரசி டயானா மேற்கொண்ட இரு சந்திப்புக்களின் பின் இப்புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. 1992 பெப்ருவரி மாதத்தில் முதல் சந்திப்பு ரோம் நகரின் சுற்றுப்புற சிற்றாலயத்தில் இடம்பெற்ற பொழுது, இருவரும் பாத அணியின்றி முழந்தாளிலிருந்துசெபித்தனர்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## கருதினால் பஜ்ஜியோ காலமானார்

கடந்த ஞாயிறு 21-03-93 காலை ரோம் நகர்மருத்துவமனை ஒன்றில் கருதினால் செபஸ்ரியன் பஜ்ஜியோ தனது 79 வது வயதில் காலமானார். இவர் ரோம் திருச்சபையின் சேம்பளின், கருதினால் ஆயர்களின் தலைவர் ஆகிய பதவிகளை வகித்து வந்தார். 1969இல் கருதினால் பதவிக்கு உயர்த்தப்பட்ட இவர், பணிகள் நிறைந்த தனது நீண்டகால வாழ்க்கையில் திருச்சபைக்கு தாராள சிந்தை நிறைந்த சேவையில் சிறந்து விளங்கினார். இவரின் அடக்கச்சடங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இவருடைய இறப்போடு கருதினார்மார்களின் எண்ணிக்கை 152 ஆகின்றது. இவர்களில் 110 பேர் 80 வயதிற்குட்பட்டவர்கள்; போப்பாண்டவரை தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கின்றார்கள்.

## குருத்துவ நிறைவு தினம் "செபிப்போமாக"

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரில் | 6 | யேம்ஸ் Y. பத்திநாதர் | 1970 |
| | 10 | P. இருதயதாஸ் | 1975 |
| | 12 | R. H. சகாயநாயகம் | 1978 |
| | 13 | P. P. பிலிப் o. m. i. | 1962 |
| | 17 | கிறிஸ்ரியன் வாஸ் | 1975 |
| | | A. J. V. சந்திரகாந்தன் | 1979 |
| | 18 | கமிலஸ் நிமலன் | 1983 |
| | 19 | C. S. குணைதாசன் குருஸ் o. m. i. | 1968 |
| | 24 | யஸ்ரின் B. ஞானப்பிரகாசம் | 1974 |
| | | S. M. செபஸ்ரியன் o. m. i. | 1986 |
| | 26 | பற்றிக் ஞானப்பிரகாசம் o. m i | 1972 |
| | | S. டேமியன் o. m. i. | 1972 |
| | 29 | வினஸ் சொய்சா o.m.i. | 1986 |

Nallur Branch Library

# படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக திருப்பலியாற்றிய ஆயர் தாக்கப்பட்டார்

கெய்கில் அண்மையில் பலியானவர்களின் அடக்கத் திருப்பலியை நடத்திய ஆயர் ஒருவரை வன்முறைக் கும்பல் ஒன்று கடுமையாகத் தாக்கியுள்ளது. ஆயர் வில்லி ரோமிலசை இத்தாக்குதலிலிருந்து காப்பாற்றிய ஐ. நா மற்றும் அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகள் தாங்கள் அவ்விடத்தில் இருந்திராவிட்டால் ஆயர் கொல்லப்பட்டிருப்பார் என்று கருத்துத் தெரிவித்தனர். படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் அடக்கச்சடங்கு திருப்பலி நிறைவேற்றிய வேளை அரசு இவ் உயிருக்கு ஒருவிதத்தில் காரணம் என்று சுட்டிக்காட்டி கெய்கியின் ஜனநாயகத்திற்கு அழைப்பு விடுத்தார் ஆயர் ரோமலெவ். அரசுக்கெதிரான நடவடிக்கைகளை எடுக்க ஆயர் விண்ணப்பித்த வேளை, 1991 இராணுவ ஆட்சிக்காலத்தில் பதவி இழந்த ஜனநாயக அரசுத்தலைவர் ஜோன் பெற்றின் ஆதரவான சுலோகங்களை மக்கள் எழுப்பிக்கொண்டிருந்தனர். இதற்கிடையே கெய்கே ராணுவ அரசின் மனித உரிமைகள் மீறல்களை மேற்பார்வையிட ஐ. நா. குழுவும் அமெரிக்க நாடுகள் நிறுவனமும் அந்நாட்டில் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

## நெடுந்தீவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது 4000 மக்கள் வாழும் நெடுந்தீவில், ஆயர் அவர்கட்கு அமோக வரவேற்புக் கிடைத்தது. பங்குத்தந்தை A. J. அன்ரனிதாஸ் வேண்டிய சகல ஆயத்தங்களையும் செய்திருந்தமையால், ஆயர் நிறைவேற்றிய உறுதிப்படுத்தல் சடங்கில் 200 பிள்ளைகள் திருவருட்சாதனம் பெற்றனர்.

எழுவைதீவிலும் அருட்தந்தை யூஜீன் பிரான்சீஸ் அடிகளாரின் உதவியுடன் அங்கு வாழும் 1500 மக்களை ஆண்டகை அவர்கள் சந்தித்து, அங்கும் உறுதிப்படுத்தல் திருவருட்சாதனம் நிறைவேற்றப் பட்டது.

இத்தீவுகளிலுள்ள மக்கள் பொருளாதார ரீதியில் அதிக கஸ்டங்களை அநுபவியாதிருந்தாலும், தங்கள் உறவினரை விட்டுப் பிரிந்திருப்பதினால் உள ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கண்ணீர் சொரிந்த வண்ணம் எப்பொழுது தங்கள் இனசனரைக் காணக் காலம் வரும் என்று ஏங்கி வாழ்கின்றனர்.

ஆயர் அவர்கள் லேயிடன் தீவாகிய ஊர்காவற்துறை, கரம்பன், நாரந்தனை முதலிய இடங்களிலுள்ள ஏறத்தாள 150 மக்களையும் தரிசித்ததுடன், புங்குடுதீவில் திருப்பலி நிறைவேற்றினார். ஆலயங்களும், பிரபல்யமான சென் அன்ரனிஸ் கல்லூரியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

இக் கடல் பயணம் இராணுவ. கடற்படை உதவியுடன் 14 "கப்பல்களில்" மேற்கொள்ளப்பட்டது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81